[30th March 1964

கனம் சபாநாயகர் : சொல்லப்படுவதை எல்லாம் வைத்து கேள்விகள் கேட்கக் கூடாது.

திரு. பி. கே. மூக்கையா தேவர் : கூவம் பக்கிங்காம் நதியை சுத்தம் செய்வதோடு நகர வசதிக்காக போக்குவரத்து திட்டமும் அதோடு இணைக்கப்பட்டிருப்பது உண்மையா ?

கனம் திருமதி ஜோதி வெங்கடாசலம் : ஆம். ஜெட்டீஸ் போல் செய்து போட்ஸ் விட, முதலாவது ஸ்டேஜ்க்கு 60 லட்சம், பின் செகன்ட் ஸ்டேஜ் இருக்கிறது. ஸ்கீம் எல்லாம் ஒழுங்காக இருக் கிறது. டரெட்ஜேர்ஸ் குறைவாக இருப்பதால் இயலாமல் இருக் கிறது. அது கிடைத்து விட்டால் போட் விடுவது, சுற்றுப்புறத் தில் பார்க் அமைப்பது என்பது பற்றியெல்லாம் ஸ்கீம் இருக் கிறது.

ஆல்கஹால் கலந்த மருந்துகள் தயாரித்தல்

* 453 கேள்வி.—**திரு. வி. ஆர். பெரியண்ணன் :** கனம் உள்துறை அமைச்சர் தயவுசெய்து கீழ்க்கண்ட கேள்விக்குப் பதிலளிப் பாரா—

அரசாங்க பதிவுபெற்ற வைத்தியர்களுக்கு 30 சத விகிதம் ஆல் கஹால் கலந்த மருந்துகள் தயாரிக்க அனுமதி கொடுக்க உத்தேச முண்டா ?

THE HON. SRI P. KAKKAN : No.

இல்லை.

திரு. ம. கமலநாதன் : இப்போது ஆல்கஹால் எந்த அளவுக்கு கலந்த மருந்துகள் தயாரிக்கலாம் என்று உத்தரவிடப்பட்டிருக் கிறது ?

கனம் திரு. பூ. கக்கன் : எந்த அளவிற்கு என்றில்லை. விண்ணப் பங்கள் வருருவதைப் பார்த்து போர்டு பரிசிலனை செய்துதான் அப் போதக்கப்போது எவ்வளவு கொடுக்க முடியுமோ அப்படி கொடுக் கப்பட்டு வருகிறது.

புலவர் கா. கோவிந்தன் : மருந்துக் கடைகளில் பெயின்ட் என்ற அளவிலே மருந்துகள் விற்கப்படுகின்றன சொட்டு மருந்து என்ற அதை மது அருந்துகிறவர்கள் பயன்படுத்துகின்ற நிலை இருக் கிறது. ஆகவே அப்படிப்பட்ட மருந்துகள் விற்பதை சர்க்கார் தடை செய்யும் உத்தேசமுண்டா ?

கனம் திரு. பூ. கக்கன்: தனிக் கேள்வி வேண்டும்

திரு. வி. எஸ். எஸ். மணி : பெர்மிட் வழங்குவதில் ஒன்று, இரண்டு யூனிட் என்று வாங்கப்படுகிறது. எந்த அடிப்படையில் இந்த 1, 2 யூனிட் என்பது நிர்ணயிக்கப்படுகிறது ?

THE HON. SRI P. KAKKAN : L. 1. Manufacture of medicinal and toilet preparations containing alcohol, opium, Indian hemp and other narcotic drugs and narcotics under bond for payment of duty.

L.2 Manufacture of medicinal and toilet preparations containing alcohol, opium, Indian hemp and other narcotic drugs and narcotics outside bond.

30th March 1964]

For the purpose of these licences, no distinction is made between medicinal practitioners and others.

L.3. Ayurvedic or Unani, Practitioner can manufacture Ayurvedic or Unani preparations containing self-generated alcohol for dispensing (and not for sale) under L.3 licence.

திரு. பி. கே. மூக்கையா தேவர் : இம்மாதிரி அனுமதி வழங்கி தயாரிக்கப்பட்ட மருந்துகளை சாப்பிடுகிறவர்களைத்தான் பிடித்து கேஸ்கள் போடுகிறார்கள். தயாரிக்க அனுமதி கொடுத்துவிட்டு அதே மருந்தை வாங்கி சாப்பிடும்போது ரசீது வைத்திருந்தும் அநேக கேஸ்கள் போடப்பட்டிருப்பது அமைச்சர் அவர்களுக்குத் தெரியுமா ?

கனம் திரு. பூ. கக்கன் : அந்தத் தகவல் என்னிடம் இல்லை. தனியாகக் கேள்வி போட்டால் அதுபற்றி விசாரிக்கப்படும்.

திரு. எம். எஸ். மணி : மது அருந்துபவர்களில் பலர் போலீஸ் ஸாரின் கண்களில் அகப்பட்டுவிட்டால் ஆல்கஹால் கலந்த மருந்தை சாப்பிட்டேன் என்ற சர்டிபிக்கேட்டைக் கொடுத்து விட்டு தப்பித்துக் கொள்வது கனம் அமைச்சர் அவர்களுக்குத் தெரியுமா ?

கனம் திரு. பூ. கக்கன் : அந்த தகவல் என்னிடம் இல்லை.

திரு. இரா. நெடுஞ்செழியன் : அவைத் தலைவர் அவர்களே, பெர்மிட் வழங்குவது ஐந்து ஆண்டுகளுக்கு முன்பு இருந்த நிலை இருக்கிறதா ? அல்லது இப்போது அதிகமாக வழங்கும் நிலை ஏற்பட்டிருக்கிறதா ?

கனம் திரு. பூ. கக்கன் : குடிக்க பெர்மிட் வழங்குவது குறைத்துத்தான் வழங்கப்படுகிறது. மருந்து தயாரிக்க கொடுக்கும் பெர்மிட் போர்டு பரிசீலனை செய்துதான் கொடுக்கப்படுகிறது. குறைந்திருக்கிறதா, அதிகமாகியிருக்கிறதா என்று சொல்வதற்கு என்னிடம் தகவல் இல்லை.

திரு. வி. எஸ். எஸ். மணி : பம்பாய் போன்ற நகரங்களில் பெர்மிட் விநியோகம் லிபரலைஸ் செய்ததாகச் சொல்லப்படுகிறது. அதே மாதிரி நம் மாநிலத்திலும் தாராளமாக இருப்பதற்கு வழி செய்ய ஏதாவது உத்தேசமுண்டா ?

கனம் திரு. பூ. கக்கன் : தாராளமாக என்பதின் அர்த்தம் தெரியவில்லை. கவர்மென்ட் டாக்டர் பார்த்து பரிசீலனை செய்து, அவர்களுக்கு பெர்மிட் கொடுக்கவேண்டியதுதான், இல்லாவிட்டால் அவர்கள் உடல்நிலை கெட்டுவிடும் என்று அத்தாட்சி கொடுத்து ரெக்கமெண்ட் செய்தால் அவர்களுக்குத்தான் கொடுக்கப்படும்.

திரு. கே.ஆர். ஆர்.எம். கரியமாணிக்கம் அம்பலம் : பெர்மிட் வாங்கி ஒருசிலர் குடிக்கிறார்கள். ஆனால் யார் யார் பெர்மிட் வாங்கி குடிக்கிறார்கள் என்ற நிலை தெரியாததால் மறைமுகமாக குடிப்பவர்கள் பலரைக் கூட பிடித்து கேஸ் போட முடியாமல் இருக்கிறது. ஆகவே அந்தந்த ஏரியாக்களில் உள்ள எம்.எல்.ஏ

[30th March 1964

களுக்கெல்லாம், அந்தந்த ஏரியாக்களில் பெர்மிட் வாங்கி யார் யார் குடிக்கிறார்கள் என்ற லிஸ்டை, கொடுக்க சர்க்கார் உத்தேசிக்குமா ?

கனம் திரு. பூ. கக்கன் : லிஸ்ட் கொடுத்தால் எம்.எல்.ஏக்களுக்கு தொந்தரவு வந்து விடும்.

திரு. கோ. சி. மணி : சில மருந்துகளை சாப்பிட்டால் வியாதி குணமாகும் என்றால், இத்தனை காலம் சாப்பிட வேண்டுமென்ற முறையில் வைத்திருக்கிறார்களா ? மது அருந்தினால் உடல் நோய் தீரும் என்று கருதினால் இவ்வளவு நாட்களுக்குள் மது அருந்தினால் உடல் நிலை தேறும், வியாதி குணமாகும் என்று வைத்திருக்கிறார்களா ? அல்லது சாகிற வரையில் சாப்பிட்டுக் கொண்டிருந்தால்தான் அது தீரும் என்று அரசாங்கம் கருதுகிறதா ?

Mr. SPEAKER : That is the opinion of doctors. The Hon. Minister cannot give any opinion as to whether it is necessary for lifetime or till the illness is cured.

திரு. து. ப. அழகமுத்து : மற்ற மாநிலங்களில் மதுவிலக்கு கொள்கையில் சில தளர்ச்சி ஏற்பட்டிருப்பதைப் போல் இந்த மாநிலத்திலும் அந்தக் கொள்கையைக் கடைப்பிடிப்பதில் ஒரு மாறுதல் செய்யப்போவதாக கூறுகிறார்களே, அது உண்மையா ?

கனம் திரு. பூ. கக்கன் : இந்த மாநிலந்தான் முதலில் மது விலக்குத் திட்டத்தைக் கொண்டு வந்தது. ஆகவே தளர்ச்சி என்பதே கிடையாது.

திரு. மு. கருணாநிதி : மது அருந்தப் பெர்மிட் வாங்கி இருப்பவர்கள் பெர்மிட் வாங்கி இருப்பதாக மேடைகளில் அறிவிக்கலாமா? பத்திரிக்கைகளில் எழுதலாமா? அப்படி எழுதினால் அரசாங்கம் நடவடிக்கை எடுக்குமா?

கனம் திரு. பூ. கக்கன் : பெர்மிட் வாங்கியிருப்பவர்கள் பெர்மிட் வாங்கியிருக்கிறோம் என்று சொன்னால், உண்மையாக வாங்கியிருந்தால் ஒன்றும் செய்வதற்கில்லை. திருட்டுதனமாகக் குடித்தால்தான் தக்க நடவடிக்கைகளை அரசாங்கம் எடுத்துக் கொள்ளும்.

புலவர் கா. கோவிந்தன் : உடல்நோய் காரணமாக மது அருந்த வேண்டுமென்ற நிலையில் டாக்டர்கள் கொடுக்கிறார்கள் என்று சொன்னால் அவர்கள் அடுத்து இருக்கிற மருத்துவ மனைகளில் வைத்துத்தான் குடிக்கவேண்டுமென்ற அளவிற்கு திட்டம் வகுக்க முடியுமா ?

கனம் திரு. பூ. கக்கன் : அரசாங்க அனுமதி பெற்ற டாக்டர்கள், கவர்மென்ட் டாக்டர்கள் பெர்மிட் வழங்கும்போது எந்த இடத்தில் வாங்குவது, எங்கு குடிப்பது என்றில்லை. பெர்மிட் கொடுக்கிறார்கள், வாங்க வேண்டிய இடத்தில் அவர்கள் வாங்கிக் கொள்கிறார்கள்.

30th March 1964]

திரு. எம். எஸ். மணி : தினசரி மது அருந்துகிற சில பிரமுகர்கள், தினசரி மது அருந்தியும் நிடமுரென்று அது சம்பந்தமான அதிகாரிகள் அவர்களை கண்காணித்து ஸ்டாக்கை பரிசோதனை செய்தால் எப்போதுமே அவர்களுக்குள்ள உயர்ந்தபட்ச கோட்டா இருந்து கொண்டேயிருக்கிறது. அதற்கு காரணம் என்னவென்று அமைச்சர் அவர்கள் அறிவார்களா ?

கனம் திரு. பூ. கக்கன் : அப்பேர்ப்பட்ட தகவல் என்னிடம் வந்திருக்கிறது. அப்படியிருந்தால் தக்கமுறையில் கண்காணித்து வரவேண்டுமென்று போலீஸ் அதிகாரிகளுக்கு சொல்லப்பட்டிருக்கிறது.

திரு. டி. கார்ச்சா கவுடர் : பெர்மிட் வைத்திருப்பவர்கள் அவர்கள் வீட்டில் குடித்து விட்டு, சாயங்காலம் அல்லது ராத்திரி குடித்துவிட்டு படுத்துக் கொள்ளவேண்டுமென்ற நிபந்தனை விதிக்கவேண்டும். அப்படியல்லாது பகலில் பொதுயிடங்களுக்கு குடித்து விட்டு வருகிறார்கள். இதைக் கட்டுப்படுத்த அரசாங்கத்திற்கு உத்தேசமுண்டா ?

கனம் திரு. பூ. கக்கன் : தனிக் கேள்வி போட்டால் பூர்ணமாக முழு விவரமும் தெரிந்து சொல்லப்படும்.

திரு. வெ. கிருஷ்ணமூர்த்தி : வசதி படைத்தவர்கள் பெர்மிட் வாங்கிக் குடிக்கிறார்கள். ஆனால் ஏழை மக்களுக்கு அது முடியவில்லை. ஆகவே அரசாங்கத்தின் கொள்கையை நிலைநாட்டுகிற அளவில் இந்த பெர்மிட் கொடுக்கிற முறையையே ரத்து செய்ய அரசாங்கம் முன்வருமா ?

கனம் திரு. பூ. கக்கன் : ஏழை மக்களைக் காப்பாற்றத்தான் இந்த சட்டம் கொண்டு வரப்பட்டது. அவர்கள் குடித்து கெட்டுப் போகாமல் இருக்க வேண்டும். ஆகவே, ஏழை மக்கள் குடித்தால் அவர்கள் ரொம்ப ஏழைகளாகப் போய் விடுவார்கள்.

திரு. கோ. சி. மணி : மது அருந்தித்தான் உயிர் வாழ வேண்டுமென்று இருக்கிறவர்களுக்கு, மது போன்று குணம் தருகிற வேறு மருந்துக்களைக் கண்டு பிடிக்க அரசாங்கம் முயற்சி செய்து கொண்டிருக்கிறதா?

கனம் திரு. பூ. கக்கன் : அப்படிப்பட்ட முயற்சி இல்லை.

MR. SPEAKER : The Hon. Minister for Home cannot answer this question.

கனம் திரு. எம். பக்தவத்சலம் : வைத்திய நிபுணர்கள், இவர்கள் உடல்நிலையையொட்டி மது அருந்த வேண்டும் என்று சர்டிபிகேட் கொடுக்கும்போதுதான் இது கொடுக்கப்படுகிறது. உடல்நிலையை யொட்டி மது அருந்தவேண்டுமென்று சொல்லும்போது கான்ஸ்டிட்யூஷன்படி மறுப்பதற்கில்லை. ஆகவேதான் பெர்மிட் கொடுக்கப்பட்டு வருகிறது.